

நான் முதல்வன் திட்டத்தின் ஒரு பிரிவான SCOUT (Scholarships for Outstanding Undergraduate Talent in Tamil Nadu) திட்டத்தின் கீழ் தென் கொரியா நாட்டில் பயிற்சியை நிறைவு செய்த கல்லூரி மாணவர்கள் வள்ளுவர் கோட்டத்தில் கல்தேர் முன்பாக துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர். இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா.எழிலன், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் கிராந்தி குமார் பாடி, திட்ட இயக்குநர் திருமதி செ.சாந்தி, தைபே 2025 உலக திறன்போட்டியில் வெற்றி பெற்ற கரூர் மாவட்டத்தை சேர்ந்த மாணவர் முகம்மது மஃபாஸ், ஈரோடு மாவட்டத்தை சேர்ந்த மாணவர் சுரேந்திரன் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.






துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.1.2026) சென்னை சிந்தாதரிப்பேட்டையில் 2.36 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட் கோஷன் மண்டபம் கிளை நூலகத்தை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், பள்ளிக் கல்வித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு தலைவர் பணிகள் நே.சிற்றரசு, மண்டலக்குழு தலைவர் எஸ்.மதன்மோகன், பொது நூலகத்துறை இயக்குநர் திருமதி ச.ஜெயந்தி, சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழுத் தலைவர் கவிஞர் மனுஷ்ய புத்திரன், பள்ளிக் கல்வி இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், தொடக்கக் கல்வி இயக்குநர் முனைவர் பூ.ஆ.நரேஷ் உள்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

## மாணவர்கள் நன்றாகப் பயன்படுத்தி முன்னேற வேண்டும்!

# மற்ற மாநிலங்களில், படிப்பு சவாலாக இருந்து வரும் நேரத்தில் தமிழ்நாட்டில் மட்டும்தான் கல்வியில் அடுத்தகட்ட வளர்ச்சி!

### தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் சார்பில் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் விழாவில்

### துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

**சென்னை,ஜன.9–**

**சென்னை, வள்ளுவர் கோட்டத்தில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் சார்பில், நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு வெற்றிபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி சிறப்புரையாற்றினார்.**

**அப்போது அவர், "மற்ற மாநிலங்களில் பள்ளிப் படிப்பும் கல்லூரிப் படிப்புமே பெரிய சவாலாக இருந்து வரும் நேரத்தில், நம்முடைய தமிழ்நாட்டில் மட்டும்தான் நாம் கல்வியில் அடுத்தகட்ட வளர்ச்சியை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கிறோம். மாணவர்கள் இதை நன்கு பயன்படுத்தி முன்னேற வேண்டும்" என்று குறிப்பிட்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய சிறப்புரையின் விவரம் வருமாறு:**

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் சார்பாக நடைபெறுகின்ற இந்தச் சிறப்பான நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, உங்களையெல்லாம் சந்திக்கின்ற இந்த வாய்ப்பைப் பெற்றதற்கு உள்ளபடியே நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். வந்திருக்கக்கூடிய அனைவருக்கும் முதலில் என்னுடைய ஆங்கிலப் புத்தாண்டு நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

#### தமிழ்நாட்டுக்குப் பெருமை

இந்த அரங்கத்தில் இருக்கக்கூடிய நீங்கள் ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு துறையில் நிச்சயமாகத் திறன்மிக்கவர்களாக இருப்பீர்கள். அதற்கு ஒரு சிறந்த உதாரணமாக, இன்று இந்த மேடையில் இரண்டு பேர் அமர்ந்திருக்கிறார்கள். 'வேர்ல்ட் ஸ்கில்ஸ் தைபே 2025'-இல் மென்பொருள் மேம்பாட்டுத் திறன் (Software Development Skill) பிரிவில் கரூர் பள்ளப்பட்டியைச் சேர்ந்த தம்பி முஹம்மது மஃபாஸ் 'மெடல் ஆஃப் எக்ஸலன்ஸ்' பெற்று, இன்றைக்கு நம்முடைய தமிழ்நாட்டிற்குப் பெருமை தேடித்தந்திருக்கிறார்.

அதேபோல் ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த தம்பி சுரேந்திரன் அவர்கள் 'பிளாஸ்டரிங் அண்ட் டிரைவால் சிஸ்டம்ஸ் ஸ்கில்ஸ்' பிரிவில் இந்தியா சார்பாகப் பங்கேற்றிருக்கிறார். இரண்டு பேருக்கும் நம்முடைய துறையின் சார்பாக, அரசு சார்பாக நாம் அனைவரும் நம்முடைய வாழ்த்துகளை முதலில் தெரிவித்துக் கொள்வோம்.

திறன் மேம்பாடு அல்லது திறனை வளர்த்துக்கொள்வது என்பது சாதாரண விஷயம் கிடையாது. அதற்குச் சீரான முயற்சி, ஒழுக்கம், முக்கியமாகக் கடின உழைப்பு நிச்சயம் வேண்டும். இந்த மூன்றும் இல்லாதவர்களால் எந்த ஒரு திறனையும் நிச்சயமாக வளர்த்துக்கொள்ள முடியாது.

#### முயற்சி, ஒழுக்கம், கடின உழைப்பு

சில பேருக்குத் திடீரென்று சில விஷயங்களில் ஆர்வம் வரும். அதில் சிறிது நேரம் கவனம் செலுத்துவார்கள். சில நாட்களுக்கு அந்த விஷயத்தைப் பற்றிப் படிப்பார்கள், கற்றுக்கொள்ள முயற்சிப்பார்கள். பிறகு அதனைப் பாதியிலேயே விட்டுவிட்டு வேறு ஏதாவது ஒரு விஷயத்திற்கு மாறிவிடுவார்கள். அந்த மாதிரி இருந்தால், எந்த ஒரு துறையிலும் நாம் வல்லுநராக முடியாது. சீரான முயற்சி, ஒழுக்கம், கடின உழைப்பு இந்த மூன்றும் தொடர்ந்து இருந்தால்தான் நீங்கள் வாழ்க்கையில் இன்னும் பல உயரங்களை நிச்சயமாகச் சென்றடைய முடியும்.

இதற்குச் சரியான ஒரு எடுத்துக்காட்டுதான் நம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். பள்ளி மாணவராக இருக்கும் போதே 'மாணவ நேசன்' என்ற ஒரு கையெழுத்துப் பத்திரிகையைத் தொடங்கினார்; அதன் பிறகு, அது 'முரசொலி' யாக மாறியது. அப்போது ஆரம்பித்துத் தன்னுடைய வாழ்நாளின் கடைசி காலம் வரை கலைஞர் அவர்கள் எழுதிக் கொண்டே இருந்தார், படித்துக் கொண்டே இருந்தார்.

தமிழ்நாட்டில் 'பேனா' என்று சொன்னால், கலைஞர் பெயர்தான் பலருக்கும் நினைவுக்கு வரும். அந்த அளவிற்கு அவர் எழுத்துப் பணியைத் தொடர்ந்தார். அதிகாலையில் எழுந்து செய்தித்தாள்களைப் படித்து முழு விவரத்தையும் தெரிந்து கொள்வார். தொழில்நுட்பத்தில் முழுக்க முழுக்கத் தன்னைப் புதுப்பித்துக்கொண்டே இருப்பார். மறையும் வரை சமூக ஊடகங்கள் வரை அவர் செயல்பாட்டுடன் இருந்தார். அரசியல் களத்தில் எதிரிகள் மாறி மாறி வந்தாலும், கலைஞர் அவர்கள் நிலைத்து நின்றார் என்றால், அதற்கு காரணம் அவருடைய கடின உழைப்பு.

#### திறன் மேம்பாட்டுக் கழகம்

அந்த, வகையில், தமிழ்நாட்டில் பல திறமையாளர்களை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு நம்முடைய திறன் மேம்பாட்டுக் கழகம் இன்று சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது. மாணவர்களின் திறனை மேம்படுத்த நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 'நான் முதல்வன்' திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்கள். அந்தத் திட்டம் எந்த அளவிற்குப் பயன்பட்டிருக்கிறது என்று உங்களையெல்லாம் பார்க்கும்போது, இங்கு வந்திருக்கக்கூடிய வெற்றியாளர்களைப் பார்க்கும்போது தெளிவாகத் தெரிகிறது. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் நடத்துகின்ற தமிழ்நாடு 'ஸ்கில்ஸ் காம்பெடிஷன்'-இல் வெற்றிபெற்ற மாணவர்கள், இன்றைக்கு 'வேர்ல்ட் ஸ்கில் காம்பெடிஷன்' வரை சென்று சாதிக்கிறீர்கள்.

கடந்த 2025-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தைவானில் நடந்த 'ஆசியன் ஸ்கில்ஸ்' போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த மூன்று பேர் பங்கேற்று இருக்கிறீர்கள். இப்போது இந்த ஆண்டுக்கான 'வேர்ல்ட் ஸ்கில்ஸ் காம்பெடிஷன்'-இல் கலந்துகொள்வதற்கு நம் மாணவர்கள் தயாராகிக்கொண்டு இருக்கிறார்கள். உங்களில் பல பேர் கலந்துகொண்டு வெற்றி பெற வேண்டும் என்று எங்களுடைய வாழ்த்துகளை நாங்கள் தெரிவித்துக் கொள்கிறோம்.

#### புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

போட்டிகளில் வெற்றிபெறும் மாணவர்களுக்கான வேலைவாய்ப்புகளையும் உடனே வழங்க வேண்டும் என்று இன்றைக்குப் பல பெரிய நிறுவனங்களோடு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன. அதேபோல் 'நான் முதல்வன்' திட்டத்தில் கேம்பஸ் நேர்காணல்கள் (Campus Interviews) நடந்துகொண்டிருக்கின்றன. கடந்த டிசம்பர் மாதம் தொடங்கி, இப்போது வரை நடந்த வேலைவாய்ப்பு முகாம்களில் கிட்டத்தட்ட 1,200 மாணவர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தந்திருக்கிறது நம்முடைய அரசு.

'நான் முதல்வன்' திட்டம் மூலமாக வரும் ஜூன் மாதம் வரை, தமிழ்நாடு முழுவதும் நூற்றுக்கும் அதிகமான வேலைவாய்ப்பு முகாம்கள் நடக்க இருக்கின்றன. இதன் மூலமாக, இன்னும் பல ஆயிரம் மாணவர்களுக்கு 'இன்போசிஸ்', 'அமேசான்', 'டாடா, 'டி.வி.எஸ்', 'அப்போலோ குழுமம்' எனப் பல முன்னணி நிறுவனங்களில் வேலைவாய்ப்பு கிடைக்க இருக்கிறது. மாணவர்களுக்குத் தேவையான திறன் பயிற்சியை, அந்த நிறுவனங்களே கொடுக்க முன்வருகின்றன. பயிற்சி அளிப்பது மட்டுமல்லாமல், அவர்களைப் பணியமர்த்தியும் கொள்கிறார்கள்.

#### தென்கொரியாவில் பயிற்சி

பயிற்சி என்றால், தமிழ்நாட்டில் மட்டும் இல்லை, உலகில் பல நாடுகளில் இருக்கின்ற தொழிற்சாலைகளுக்கும் பல்கலைக்கழகங்களுக்கும் நம்முடைய மாணவர்கள் பயிற்சிக்காகச் சென்று வருகிறீர்கள். அரசின் 'ஸ்கவுட்' திட்டத்தின் மூலமாகப் பத்து மாணவர்கள் தென்கொரியாவில் பயிற்சி முடித்துவிட்டுத் திரும்பியிருக்கிறார்கள். இன்னும் இரண்டு மாதங்களில், மேலும் 90 மாணவர்கள் ஜெர்மனி, ஜப்பான், போலந்து, பஹ்ரைன், சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்குப் பயிற்சிகளுக்காகச் செல்ல இருக்கிறார்கள்.

மற்ற மாநிலங்களில் பள்ளிப் படிப்பும் கல்லூரிப் படிப்புமே பெரிய சவாலாக இருந்து வரும் நேரத்தில், நம்முடைய தமிழ்நாட்டில் மட்டும்தான் நாம் அடுத்த கட்ட வளர்ச்சியை நோக்கிப் பயணித்துக்கொண்டிருக்கிறோம்.

மாணவர்கள் இன்னும் பல உயரங்களைத் தொட வேண்டும் என்றுதான், இரண்டு நாட்களுக்கு முன்னால் 10 லட்சம் மடிக்கணினிகளைக் கல்லூரி மாணவர்களுக்கு வழங்குகின்ற நிகழ்ச்சியை, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்திருக்கிறார்கள். இப்படித் தொடர்ந்து மாணவர்களுக்கான திட்டங்களை நம் முதலமைச்சர் அவர்கள் தந்துகொண்டிருக்கிறார்.

யு.பி.எஸ்.சி (UPSC) தேர்வை எடுத்துக்கொண்டால், முன்பெல்லாம் அதில் தேர்வாகின்ற நம் நாட்டு மாணவர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் குறைந்துகொண்டே வந்தது. அதைச் சரி செய்ய வேண்டும் என்று 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் யு.பி.எஸ்.சி தேர்வுக்குத் தயாராகும் மாணவர்களுக்குப் பயிற்சி மற்றும் ஊக்கத்தொகையை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிமுகம் செய்தார்கள். 2021-இல் தமிழ்நாட்டிலிருந்து யு.பி.எஸ்.சி-க்குத் தேர்வானவர்கள் வெறும் 27 பேர்தான் இருந்தார்கள். இன்றைக்கு 'நான் முதல்வன்' திட்டம் வந்த பிறகு, கடந்த 2025-ஆம் ஆண்டில் 59 பேர் தமிழ்நாட்டிலிருந்து யு.பி.எஸ்.சி தேர்வுகளில் வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

#### அரசு என்றைக்கும் தயார்

அதேபோல ரயில்வே தேர்வு, வங்கித் தேர்வு, ஸ்டாப் செலக்ஷன் கமிஷன் (S.S.C.) தேர்வு என அனைத்துப் போட்டித் தேர்வுகளுக்கும் படிக்கின்ற மாணவர்களுக்கு நம் அரசு எல்லா விதமான உதவிகளையும் ஊக்கத்தையும் அளித்து வருகின்றது. ஏனெனில், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்வது போல, மாணவர்களாகிய நீங்கள் படிப்பில் மட்டும் கவனம் செலுத்துங்கள். உங்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்ய நம் முதலமைச்சர் அவர்களும் நம்முடைய அரசும் என்றைக்கும் தயாராக இருக்கிறது.

நாளை உங்களிலிருந்து ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எஃப்.எஸ்., அதிகாரிகள் உருவாக வேண்டும். பெரிய பெரிய நிறுவனங்களில் நீங்கள் அதிகாரிகளாகச் சென்று அமர வேண்டும். மற்றவர்களுக்கு நீங்களும் ஓர் ஊக்கமாக இருக்க வேண்டும். நீங்கள் வேலை தேடும் நிலைமை மாறி, இன்றைக்கு நான்கு பேருக்கு வேலை கொடுக்கின்ற நிலைமைக்கு உங்களை உருவாக்கிக்கொள்ள வேண்டும். அதற்குத் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் என்றைக்கும் உங்களுக்கு உறுதுணையாக இருக்கும். திறன் போட்டியில் வென்ற, உங்கள் அனைவருக்கும் மீண்டும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்து, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றினார்.

#### பங்கேற்றவர்கள்

நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா.எழிலன், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ் ஐ.ஏ.எஸ்., மாநகராட்சி நிலைக்குழு தலைவர் நே.சிற்றரசு, திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் கிராந்திகுமார் ஐ.ஏ.எஸ்., திறன் மேம்பாட்டுக் கழகத் திட்ட இயக்குநர் சாந்தி, 'வேர்ல்ட் ஸ்கில் ஏசியா' போட்டியில் பதக்கம் வென்ற முஹம்மது மஃபாஸ், சுரேந்திரன், மா.பா. அன்புதுரை, வினோத் வேலாயுதம், நுங்கை வி.எஸ். ராஜ், கௌதம், வழக்கறிஞர் பிரகாஷ் மற்றும் அரசு அதிகாரிகள் அலுவலர்கள் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.1.2026) சென்னை வள்ளுவர் கோட்டத்தில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற விழாவில், நான் முதல்வன் போட்டித் தேர்வு பிரிவின் வாயிலாக உறைவிடப் பயிற்சி பெற்று பணியாளர் தேர்வு வாரியத்தின் தேர்வு, வங்கித்தேர்வு, இரயில்வே தேர்வு ஆகிய தேர்வுகளில் பணி நியமனம் பெற்ற 80 மாணவர்களில் 16 வெற்றியாளர்களுக்கு பதக்கம் வழங்கி சிறப்பித்தார். இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா.எழிலன், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் கிராந்தி குமார் பாடி, திட்ட இயக்குநர் திருமதி செ.சாந்தி மற்றும் கலந்து கொண்டனர்.